ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2140/1 - 2019 සැප්තැම්බර් මස 09 වැනි සඳුදා - 2019.09.09
*2140/1 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### மற்றைய நியமனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13(ஆ) என்னும் உப உறுப்புரையின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்**

*இல. 15 – குருநாகல் தேர்தல் மாவட்டத்திற்காக 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. சாலிந்த திசாநாயக்க இறப்பெய்தியுள்ளதன் காரணமாக எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64(1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார் ஆதலாலும்,*

*அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13(ஆ) என்னும் உப உறுப்புரையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, இவ்வெற்றிடத்தை நிரப்புமாறு அவ்வுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64(1) என்னும் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,*

*தெரிவத்தாட்சி அலுவலர் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64(2) ஆம் பிரிவின் கீழ் செயற்பட்டு, அத்தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக திரு. எச். எம். டீ. பி. ஹேரத் என்பவர், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்தி மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "க" என்னும் படிவத்திலான விபரத்திரட்டை சமர்ப்பித்துள்ளாராதலாலும்,*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் மேற்கூறப்பட்ட 64(2) ஆம் பிரிவினால் தேர்தல் ஆணைக்குழுவிற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, மேற்கூறப்பட்ட திரு. சாலிந்த திசாநாயக்க இறப்பெய்தியுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக இல. 15 – குருநாகல் தேர்தல் மாவட்டத்திற்கான எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக திரு. எச். எம். டீ. பி. ஹேரத் என்பவர், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய, | என். ஜே. அபேசேகர, | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், |
| தவிசாளர், | அங்கத்தவர், | அங்கத்தவர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
*2019, செத்தெம்பர் 09.*

1A - G 30557— 387 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*
**கவனிக்க.**- *2139/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைத் தொடரின் இறுதி இல. 2139/76 ஆகும்.*